மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விடையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஆணைகள் பிறப்பிக்கப்படாமல் இருந்தால், பிறப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 298 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Selection Grade has not been given to teachers of " B-Wing " in High Schools which are under the control of Chief Educational Officers in Salem and Dharmapuri Districts; and

(*b*) if so, the reason therefor ?

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், தருமபுரி மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலரின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில், "பி" பிரிவில் (B-Wing) பணியாற்றும் ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு வழங்கப்படாமல் உள்ளதா?

(இ) ஆமெனில் ,அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சேலம், தருமபுரி மாவட்டங்களிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பணி மூப்பு பட்டியல் வருவாய்த் துறை மாவட்ட வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு, தேர்வுநிலை அளிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டு இருக்கிறது. அதனால் தேர்வுநிலை பதவிகள் வழங்க முடியவில்லை.

Salary of Teachers

* 299 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Headmasters and Graduate Assistants in Government (B) High Schools in the Ramanathapuram District, who get a lower salary than their juniors after the revised fixation of salaries according to the recommendations of the Second Pay Commission ; and

(*b*) if so, the reasons therefor?

ஆசிரியர்கள் சம்பளம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளுக் கிணங்க, சம்பள வீதங்கள் மாற்றியமைக்கப்பட்ட பிறகு, இராமநாத புரம் மாவட்டத்திலுள்ள அரசினர் (B) உயர்நிலைப் பள்ளிகளில் பணியில் தங்களைக் காட்டிலும் இளநிலையில் உள்ளவர்களை விடக் குறைவாகச் சம்பளம் பெறும் தலைமை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இம்மாதிரி சில ஆசிரியர்கள் இருந்து, அவர்களுடைய கோரிக்கை பின்னால் ஏற்கப் பட்டதாவென்று அறிய விரும்புகிறேன். கேள்வி எழுப்பப்பட்டதற்குப் பின்னால், "செகண்ட் பே கமிஷன்" பரிந்துரைப்படி, இம்மாதிரிக் கொடுக்க வேண்டும்; ஜூனியர்களுக்கு இருக்கிற சம்பளத்தைக் காட்டிலும், சீனியர்களுக்குக் குறையக் கூடாதென்று இருந்தும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு, பல மாதங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்த வினா எழுப்பப்பட்டதற்குப் பிறகு அப்படிக் கொடுக்கப்பட்டதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய முழு விவரங்கள் என்னிடம் இல்லை. ஆகவே, இப்போது இந்தக் கேள்வியின்படி, அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லையென்று கூறப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அது கொடுக்கப்பட்டிருக்கலா மென்று யூகிக்கலாம். அப்படிக் கொடுக்காமலிருந்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலிக்கலாம்.

State Industries Promotion Corporation of Tamil Nadu Limited (SIPCOT)

* 300 *Q.*—Thiru S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited (SIPCOT) have formulated any Consortium Aid Scheme ; and

(*b*) if so, the details thereof ?